**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 28.04.2026

அசல் வழக்கு எண். 396/2019

வா.சா. 2 – நீலவண்ணன், த/பெ. தில்லை

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை என்றால் சரிதான். வாதி ஞானசுந்தரி அழைத்ததின் பேரில் சாட்சியம் சொல்ல வந்தீர்கள் என்றால் சரிதான். ஞானசுந்தரி அவர்களின் கணவரின் தம்பி நீங்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண், நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியாது. வாக்குமூலத்தில் சொன்ன சங்கதிகள் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து சண்முகம் முதலியார் அவர்களின் சொத்து என்றால் சரிதான். பெருமாள், வெங்கடேசன் ஆகியோர் சண்முகம் முதலியார் அவர்களின் பிள்ளைகள் என்றால் சரிதான். வெங்கடேசன், பெருமாளும் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். உங்கள் அண்ணி அவர்களுக்கு பாகப்பிரிவினை எழுதிக் கொண்ட விவரம் தெரியும் என்றால் சரிதான். உங்களுக்கு எழுத படிக்க தெரியும் என்றால் நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன் தெரியும் தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். 1970ஆம் ஆண்டு சண்முகம் முதலியார் செட்டில்மெண்ட் எழுதிய விவரம் தெரியுமா என்றால் தெரியும் சண்டை நடக்கும் போது சொல்லி இருந்தார். பி.சா.ஆ2 சண்முகம் முதலியார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் வெங்கடேசன், பெருமாள், முத்துக்குமார் ஆகிய மகன்களுக்கு இனி பிறக்கபோகும் ஆண் பிள்ளைகளும் சரிசமமாக ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது

என்றால் சரிதான். முத்துக்குமார் இளம் வயதில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் படி வெங்கடேசன் மற்றும் பெருமாள் ஆகியோர் ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.